மின்னல்-1 முழக்கம்-2

# வான் முழக்கம்




மாதாந்த பல்சுவை இதழ்

ஜனவரி/பெப்ரவரி-2002

# வீ.எம்.கே. ஜீவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:..
இல.305 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி .. 070 - 212989
070 - 212263



# V.M.K JEWELLERS

---

For Mordern And Distinctive

SHANUGA JEWELLERS

Articles Are All Guranteed
& Genuine For Quality Jewels

ரம்மியமான நகைத் தெரிவுக்கு ராசியான இடம்......



## சாஹுகா
ஜீவல்லர்ஸ்

200, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அழகு நகைகளின் அரங்கம்

SHANUGA JEWELLERS

200G, Kasthuriyar Road, Jaffna.

---

## நிஷானந்தா
ஜீவல்லறி



Nishananthaa
Jewellery

NJ

75, Kasturiyar Road,
Jaffna.

75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஆசிரியர் உள்ளத்தில் இருந்து.....

"வான் முழக்கம்" இரண்டாவது இதழ் மலர்ந்துள்ளது புதிய ஆண்டில் உங்கள் கரங்களை வந்தடைவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகிறோம்.

இருந்தும் நாங்கள் முதல் இதழில் குறிப்பிட்டது போன்று "வான் முழக்கம்" ஒவ்வொரு மாதமும் உங்கள் கரங்களில் தவழ முடியாத நிலமை உள்ளதையிட்டு உங்களிற்கு தெரியப்படுத்துகிறோம். வான் முழக்கம் இரண்டு மாதங்களிற்கு ஒரு முறை மட்டும் வெளிவர உள்ளது. காலவோட்டத்தில் ஒவ்வொரு மாதமும் வெளியிட முயற்சி எடுக்கப்படும். வான் முழக்கத்தில் இவ் இதழில் இருந்து பொதுஅறிவு, உளவியல் கருத்துக்கள் என்பன வற்றிற்கு முக்கியஇடம் கொடுக்கப்படும்.

இதைவிட வான்முழக்கம் சஞ்சிகையில் அரசியல் கட்டுரைகளும் வெளிவரும் இதைவிட சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்துக்களும் இடம்பெறும். இதன் மூலம் ஒரு பரந்த உலகப்பார்வையையும் விரிந்த வாழ்வனுபவத்தையும் ஏற்படுத்தலாம் என நம்புகின்றேன்

அன்புடன் ( ஆசிரியர் )

உள்ளே.....

1)முழக்கம்_ _ -02
2)தாயகம்_ _ -04
3)காலம் மலராதோ_ -06
4)அழகுத்தேவதை_ -07
5)கேள்வி பதில்_ -12
6)மாணவர் பக்கம்_ -14
7)பொதுஅறிவு_ -20
8)கல்லூரி மாணவர் -22
9)கட்டுரைப் போட்டி -24

வான் முழக்கம்
284-பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 3533

# முழக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை அரசிற்கும் மிடையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் என உள்நாட்டில் மட்டுமல்ல உலக அரங்கில் கூட ஆர்வமாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் தமது அரசியல் சாணக்கியத்தை மிகவும் கவனமாகவும் விவேகமாகவும் கையாண்டுள்ளனர். புதிய அரசு பதவி ஏற்ற கையுடனேயே விடுதலைப் புலிகள் ஒரு மாத கால யுத்த நிறுத்தத்தை அறிவித்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி புதிய அரசிற்கு சமாதானத்தின் தேவையை உணர்த்தியுள்ளனர்.


புதிய அரசிற்கு விடுதலைப் புலிகள் மட்டும்மல்ல சிங்கள மக்களும் தமிழ் மக்களும் கூட சமாதானத்தின் தேவையை தேர்தல் காலத்தில் வெளிப்படுத்தி இருக்கின்றனர். முன்னைய சந்திரிக்கா அரசு கூட சமாதான தேவதையாகவே வலம் வந்தது. பின்னர்தான் யுத்தத்தை நடத்திக் கொண்டு சமாதானத்தை ஏற்படுத்தலாம் என பிரச்சாரம் செய்தபடி யுத்தத்தை மிகத் தீவிரமாக மேற் கொண்டு வந்தது. இந்த நிலையில் தான் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசு சமாதானத்தை ஏற்படுத்தப்போவதாக கூறி வருகிறது. சமாதானத்தை ஏற்படுத்துவது வரவேற்கத்தக்கது தான். ஆனால் புதிய அரசு பதவி ஏற்ற கையுடன் இந்தியாவிற்கு விஜயம் செய்தது. இந்தியாவில் சமாதானத்திற்கு மறைமுகமாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் இந்திய அரசு பேச்சுவார்த்தையை நடத்துங்கள் ஆனால் புலிகள் மீதான தடையை மட்டும் நீக்காதீர்கள் இதைவிட நீங்கள் வழங்குகின்ற தீர்வுத்திட்டம் இந்தியாவின் ஒருமைப்பாட்டை எக்கட்டத்திலும் பாதிக்காதபடி இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டதாம். இதற்கு ரணில் விக்கிரமசிங்காவும் தலையாட்டி விட்டு வந்ததாகவும் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் கருத்தை இழுத்தடிக்கும் வகையில் குறைந்தது 6 மாதங்கள் மட்டும் இப்படியான தற்காலிக அமைதி நிலவும் பின்னர் மீண்டும் இருபகுதிக்கும் இடையில் போர் மூழுவதற்கே கூடுதல் வாய்ப்பு உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் இந்திய இராணுவத்துடன் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னரே இந்தியாவுடன் மோத வேண்டி ஏற்படும் என அப்போது கூறி இருந்தார். இவ்வாறே சந்திரிக்கா அரசுடன் பேச்சுவார்த்தை இடம் பெற்ற போதும் தமது

தளபதிகளிடம் சந்திரிக்கா அரசு சமாதானத்தில் நாட்டமில்லாமல் யுத்தத்தைதான் விரும்புகிறது எனத் தெரிவித்திருந்தார். இதே போல் தான் சந்திரிக்காவின் ஆட்சியில் நோர்வே மேற்கொண்ட சமாதான முயற்சிகள் பிசுபிசுத்துப் போய்க்கொண்டிருந்த போது விடுதலைப் புலிகள் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படப் போகிறது. ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னர் புதிய அரசுடன் தான் பேசமுயற்சிப்போம் எனத் தெரிவித்தனர். புதிய அரசும் பூச்சாண்டி காட்டி வருதால் இம் முறையும் சமாதான முயற்சிகள் எதிர்பார்க்கின்ற பலனைத் தரப்போவதில்லை. சில வேளை பேச்சுவார்த்தை இடம் பெற்றாலும் ஒப்பந்தம் கைச்சாத்திடுகின்றவரை நிச்சயமாக வெல்லப் போவதில்லை நோர்வே கூட ஏற்பாட்டாளராகவே இருக்கப்போகின்றது. நோர்வே மத்தியஸ்தம் வகித்தால் சிலவேளை நல்ல விடயங்கள் ஏதும் நடக்கும். எல்லாவற்றையும் தீர்க்கதரிசி போன்று தலைவர். வேலுப்பிள்ளை பிரபாகரன் முன்னரே தெரிந்து வைத்திருப்பார். அதற்கேற்றபடி விடுதலைப்புலிகள் தமது நகர்வுகளை மேற்கொள்வர் என்பது மட்டும் உண்மை.

**"கடல்அவன்"**



# வாசகர்கடிதம்

இதழ் ஒன்று விரிந்தது
இரசிக்க வைத்தது.
இனிய செய்திகள்
இதயத்தை வருடியது.

வான் முழக்கம் மலர்ந்தது
வாசகர்களைக் கவர்ந்தது
"வான் முழக்கம்" வளமாய் வளர
வாஞ்சையுடன் வாழ்த்துகிறேன்.

- நாகமணி மகேந்திரலிங்கம்
-

05/12/2001

ஆசிரியர், வான் முழக்கம்

முதலாவது இதழ் கிடைக்கப் பெற்றது வாசித்து பலவற்றினை அறிந்து கொண்டேன். தேர்தல் காலம் என்ற காரணத்தில் தேர்தல் சம்பந்தமான விடயங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்ததனையும் அறிந்து கொள்ள முடிகின்றது ஆனாலும் இதழில் வெளிவந்த அனைத்து ஆக்கங்களும் சிறப்பானவைகளாக இருக்கின்றன. ஆனால் ஆசிரியர் உங்கள் இதழில் மரபுக்கவிதைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படடிருந்தமை அறிய முடிகின்றது. இது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் எந்த ஒரு சஞ்சிகையிலும் குறைபாடாகவே உள்ளது. இன்று வன்னி பெருநிலப்பரப்போடு ஒப்பிட்டு நோக்கும் போது இங்கு கவிதைத் தரம் வீழ்ச்சியாகவே இருக்கின்றது. இந்த நிலை மாறி மீண்டும் யாழ்ப்பாணம் இலக்கியப்படைப்பாளிகளை உருவாக்கும் ஒரு அன்னை நிலமாக மாறவேண்டும். அதற்கு உங்கள் சஞ்சிகை உறுதுணைபுரியும் என்று நம்பிக்கொண்டு விடை பெறுகின்றேன்.

நன்றி - தானா. விஷ்ணு

# "தாயகம்" சிறுவர் இல்லத்தின் பணிகள்

யாழ்குடாநாட்டில் சமூகப் பணிகளிலும் பொதுப்பணிகளிலும் ஈடுபடுவோரின் எண்ணிக்கை திருப்திகரமானதாக இல்லை. இவ்வாறு சமூகப்பணியில் ஈடுபடுவோரை ஊக்கப்படுத்துவோரும் இல்லை என்றே சொல்லலாம். இருந்தும் யாழ் குடாநாட்டின் யுத்தசூழ்நிலை காரணமாக தாயை, தந்தையை, உறவுகளை இழந்த நிலையில் அடுத்த கட்டம் குறித்து சிந்திக்க முடியாத பாலகர்களின் பரிதாப நிலை கண்டு இவர்களை பராமரிக்க என்று தனிநபர் ஒருவரால் இந்தச் சிறுவர் இல்லம் அமைக்கப்பட்டு இதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இவ் இல்லம் 07-05-2001 அன்று திறந்து வைக்கப்பட்டுளது. யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீஅமலா ஜீவலர்ஸ் உரிமையாளரான தொழல் அதிபர் திரு. செல்லையா. வீரசிங்கம் ஸ்ரீதரன் என்பவரின் தனி முயற்சியின் பலனாக இவ் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.



சகல வசதிகளும் கொண்ட "தாயகம்" கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ளது. காலப் போக்கில் நூறு சிறுவர்களைப் பராமரிக்கக் கூடியதாக விரிவுபடுத்தக் கூடிய வசதிகளையுடைய இவ்வில்லத்தில் முகாமையாளர் ஒருவர், உதவியாளர்கள் இருவர், பராமரிப்பாளர் இருவர், உணவு தயாரிப்பாளர்கள் மூவர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் ஆக மொத்தம் பதின்மர் பணி செய்கிறார்கள்.

தாயகம் ஆரம்பிக்கப்பட்ட சித்திரா பூரணை நன்னாளன்று முப்பது சிறார்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பிள்ளைகளின் சகல தேவைகளும் கவனிக்கப்பட்டு அவர்கள் தமது சொந்தத் தாயினது இல்லத்திலிருப்பது போற் பராமரிக்கப்படுகின்றனர்.

பெண்பிள்ளைகள் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கும், ஆண் பிள்ளைகள் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலைக்கும், ஒரு சில மாணவர்கள் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்திற்கும் கல்வி கற்க வாகனத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

காலை ஐந்து மணிக்கு விழித்தெழும் பிள்ளைகள் காலையில் அரை மணி நேரமும் மாலையில் அரை மணி நேரமும் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர். தேவையானவிடத்து மாணவர்கள் மேலதிக பாட வகுப்புக்களைத் தாயகத்திலேயே நடத்துவதற்கான

ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறாக, திக்கற்ற சிறுவர்களுக்கும் புகலிடம் அவர்களைப் பக்குவமாக வளர்க்கும் தாயகத்தை உருவாக்கி அதனை வேறு எவரது உதவியுமின்றி தன் சொந்தச் செலவில் நடத்திவரும் பொன்மனம் படைத்த பரோபகாரி திரு. ஸ்ரீதரன் அவர்களை நாம் செவ்வி கண்டபோது தாயகத்தில் வளரும் ஒவ்வொரு குழந்தையும் தமிழ் முத்துக்களாக வளர்த்து, நமது சமூகத்துக்கும், நாட்டிற்கும் சேவையாற்ற வேண்டுமென்பது தமது விருப்பம் என மிக அடக்கத்துடன் தெரிவித்தார். இவ்வில்லம் என்றுமே நிலைத்து நிற்கக் கூடியதாகத் தாயகம் அமைந்துள்ள காணியையும் மாடிக் கட்டடத்தையும் விலைக்கு வாங்கிப் புனரமைத்துச் சிறுவர் நல் வாழ்வுக்கு அர்ப்பணித்திருக்கின்றார் திரு. ஸ்ரீதரன் அவர்கள். அத்துடன் தாயகம் என்றும் உயிரோட்டமுள்ள சிறுவர் இல்லமாக இயங்குவதற்காக ஐம்பது இலட்சம் ரூபா பணம் வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டது என்றும், பணத்தைக் கொண்டு தாயகம் குறைவு இலா நிறை வாழ்வகமாக விளங்க வேண்டுமென்பது திரு. ஸ்ரீதரன் அவர்களது அவா.

ஐம்பதினாயிரம் ரூபா நன்கொடை கொடுப்பதற்கு இன்னுமொரு ஐம்பதினாயிரம் ரூபா செலவு செய்வது நாகரிகமாகிவிட்ட இக்காலத்தில், தனியொருவரால் பல இலட்சம் ரூபா செலவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தாயகத்தின் திறப்பு விழா மிக எளிமையாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கதோர் சிறப்பம்சமாகும். இன்று நமது சமூகத்தில் பெருந்தொகைப் பணம் அநாவசியமாக இடாம்பீகமான விழாக்களுக்கும் விளம்பரங் களுக்கும் விரயமாக்கப் படுவதையிட்டு விசனம் தெரிவித்தார் திரு. ஸ்ரீதரன் அவர்கள். என்றும் நிலைத்து நின்று ஒன்று பத்தாகப் பெருகி சமூகத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்குச் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமுள்ளதாகக் கூறும் திரு. ஸ்ரீதரன் அவர்களிடம், தாயகம் போன்ற பல்வேறு சமுதாயப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற ஆர்வம் இருப்பதை அவருடன் உரையாடும் போது உணரக் கூடியதாக இருந்தது. அவரது நன்நோக்கங்கள் யாவும் நிறைவேற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. ஸ்ரீதரன் அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றிப் பணம் படைத்த ஏனையோரும் ஆக்க பூர்வமான சமுதாயப் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டால், இந்தமண் வளம் பெற்றுப் புத்துயிர் பெற சாத்தியமுள்ளது. இவ்வாறான நற்பணிகளை செய்வார்களா? குடா நாட்டில் உள்ள ஏனைய தொழில் அதிபர்கள்.

*த.நெருப்பன்*




பொட்டு வைத்து பூ முடித்து
பொண்ணு அவள் சேலை கட்டி
வண்ண மேனி அழகு மூடி,
கண்ணுக்கழகாய் காட்சி தரும்
காலமது மலராதோ?

கோலம் மாறிடும் நாகரிகத்தில்
அலங்கோலம் வந்தது சகிக்கவில்லை?
அழகுப் பாவையவள் அலங்காரம்
அளவு மாறுது ஆடையிலும்
அளவு குறைந்து போனது
அதிலும் பிளவு வந்தது ஒரு முழம்.

உள்ளே அதிலிருக்கும் பாவாடை
எட்டி எட்டிப் பார்க்க
எட்டி நடக்கும் நடையென்ன?
அரை அடி நீள வெட்டிருக்கும்
ஓரடி நீள மினிஸ்கேட்டில்
ஒழுங்கா உடுக்க முடியலையோ?

ஏத்த வழியிதுவா உங்களுக்கு
அரை குறை ஆடை ஏனம்மா?
அரை விலை போதும் என்பதாலா?
அலசல் ஆடை மேனி காட்ட
அலட்சிய வாழ்வு நயமா உமக்கு

இலக்கியம் கண்ட பெண்மை எங்கே?
இல்லவள் இலட்சணம் எங்கே காண்போம்
இல்லையே யாரும் உதாரணம் சொல்ல
மதித்த குங்குமம் கடையில் இருக்க
மடித்த பக்கட்டு ஸ்ரிக்கர் பொட்டே
விலையிலே போகுது நித்தம் இங்கே?
கஸ்ரப்பட்டு சமையல் செய்ய
கட்டளை போட்டு அடக்கும் காலம்
இப்போ இங்கே வந்தாச்சு............!

அன்ன நடை நடந்து கொடியிடையாள்
தன்னடை கெட்ட கதையாக
சதங்கைப் பாதம் தரையிலே நடக்க
சறுக்கும் செருப்பில் அங்குல உயரம்
ஏனம்மா அதுவும் நாகரிகமாச்சு?

உனக்கு நான் அடிமையில்லை
இலட்சம் கொண்டு வந்தேண்டா......நீ
அடங்கும் காலம் மலையேறி
வீராப்பு பேசி அடக்குவதென்ன........?
பெண்ணே!

கல்லானாலும் கணவன் என்று
கணவனைத் துதித்த கன்னி மதி – நம்
பண்பாட்டை மறந்துவிட்டு
ஆடையிலும் வெட்டு விட்டு
கவர்ச்சி தரும் அழகு வேண்டாம்.........!
பெண்ணே!

கவனமாய் கேளு சொல்லுவதை
கருத்தாய் பேணு கலாச்சாரம்......!
மதித்த குங்குமம் மிதிபடலாமோ?
வேண்டாம் பெண்ணே
வேண்டாம் இக்கோலம்

ஆக்கியோன்: தமிழ்நிலா.
வவுனியா

# அழகுத் தேவதையின் பார்வையில் ஆப்கான் அகதிகள்???

தங்கக் கூண்டுக்குள் வசித்த, வசதிமிக்க யுவதி அவர். கிரிக்கெட் உலகின் முன்னாள் நாயகனின் மனைவியாரானார். மிகச் சிறப்பான சொகுசு வாழ்க்கை வாழ்ந்த அந்த இங்கிலீஷ் தேசத்து பூதப் பெண் பாகிஸ்தானின் புழுதித்தெருக்களிலும் சாக்கடை ஓரங்களிலும், முகம் சுளிக்காமல் செல்கிறார்; நடமாடுகிறார்.

## சாலிதத்தின் பக்கம்

ஒரு காலத்தில் கிரிக்கெட் உலகின் மன்னனாகத் திகழ்ந்த இம்ரான்கானின் மனைவி ஜெமீமா கான்தான் அவர்.

அவர் நினைத்திருந்தால் பாகிஸ்தானில் கூட தங்க வீட்டில் தங்கி இருக்கலாம். ஆனால் அவர் அப்படி இருக்கவில்லை.

சமீபத்தில் அவரை அதிகம் பாதித்த செய்தி "ஆப்கான் அகதிகள்" பற்றியதுதான் ஜலோசை என்னும் இடத்தில் அமைந்துள்ள அகதிகள் முகாமின் அவலத்தை அறிந்து அங்கு ஜெமீமா கான் விரைந்தார்.

ஜலோசை ஆப்கான்ஸ்தான், பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள சிறு நகரமாகும்.

80,000 அகதிகள்அங்கு உள்ளனர். இங்குமின்றி, அங்குமின்றி கவனிக்க நாதியின்றி தினந்தோறம் செத்துக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் மடிவதுதான் வேதனையின் உச்சம் என கண்ணீர் மல்கப் பேசுகிறார் ஜெமீமா.

இந்த முகாமை "மரண முகாம்" என்றுதான் சொல்ல வேண்டும் என்று குமுறுகிறார் ஜெமீமா. இவர்களது கோரக்காட்சிகளைக் கண்ட பிறகு நிதி வசூலிக்க ஜெமீமாவே களத்தில் குதித்துள்ளார். வசூலாரும் பணத்திலிருந்து நிர்வாகச் செலவிற்கென்று சல்லிக் காசு கூட எடுப்பதில்லை என்று அறிவித்திருக்கின்றார்.

தான் நேரில் கண்ட அகதிகள் முகாமைப் பற்றி அவர் கூறுவதை, அவர் வார்த்தைகளிலேயே படியுங்கள்.

### எங்களைக் கொன்று விடுங்கள்

"நாங்கள் அந்த முகாமுக்குரிய பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தோம். எங்களை நோக்கி பலமான குரல் ஒன்று வந்தது." நீங்கள் ஒரு பெரிய வெடி குண்டை எங்கள் மீது தயவு செய்து வீசங்கள்- எங்களை இப்படியே கொன்று விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். ஒரேயடியாக செத்து விடலாம். எங்கள் கண் எதிரே எங்கள்

நிகழ்வதைப் பார்க்காமல் செத்துத் தொலைந்தால் அதுவே எங்களுக்குப் பெரிய விஷயம் - உணவின்றி மருந்தின்றி எங்கள் பிள்ளைகள் அழுது அழுதே செத்துப் போகின்றனவே. "ஓங்காரமாக ஒலித்தது அந்த மாதின் குரல்,

ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருப்பதால் குழந்தைகள் வேறு காணாமல் போய் விடுகின்றன என்கிறார் ஒரு பெரியவர். தினந்தோறும் ஒரிருவர் மரணத்தை சுவைத்துக் கொண்டே இருக்கிறாகள். நேற்றிரவு பிரவசித்த ஒரு பெண்ணும் அதன் இரட்டைக் குழந்தைகளின் நிலையும் அதே கதிதான்.

நாங்கள் உணவில்லாமல் குளிரில் கூரையில்லாமல் மைதானத்தில் அல்லல்படுகிறோம். ஐ.நா.சபைக்கோ, கொ∴பி அனனானுக்கோ கண்கள் குருடாகி விட்டனவா? என்று ஒரு பெரியவர் கோபமாகக் கேட்கிறார்.

வக்கீ என்னும் முன்னாள் ஆப்கான் போராளி கூறுகையில், "இந்த நகரத்திற்கு வெளியே பிளாஸ்டிக்கூரை கூட இல்லாமல் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு மக்கள் பித்து பிடித்தவர்களாக இருக்கிறார்கள்" என்கிறார். உலகின் மிக மோசமான அகதி மகாம்களில் இதுவும் ஒன்று.

இந்த நகரம் பாக்கிஸ்தான் பெஷாவர் நகரத்தின் தெற்கில் அமைந்துள்ளது. ஐ.நா.அகதி முகாம்களின் உயர் அதிகாரியான யூசு∴ப் ஹஸன் கூறுகையில் "இது ஒர மரண முகாமாக வெகு வேகமாக மாறி வருகிறது" என்கிறார். "எவ்வளவோ சொல்லியாகிவிட்டது. செவி சாய்ப்பார்தான் யாருமில்லை. உதவி வந்தால்தானே உதவ முடியும். உதவிகளை தடுப்பது யார் என்பது ஊரறிந்த விஷயம்" என்று சாடுகிறார் அந்த அதிகாரி.

நாங்கள் கொஞ்சம் பொருட்களை முகாமுக்கு கொண்டு சென்றிருந்தோம். மாவு, மெத்தை, போர்வை, எண்ணெய் டின் ஆகியவற்றைக் கொண்டு சென்றிருந்தோம். எங்களிடம் 1000 பேருக்குரிய பொருட்கள் தான் இருந்தன. அந்தப் பொருட்கள் ஒரு கடலுக்கு இறைத்த சிறு துளியைப் போன்றிருந்தது.

## அமெரிக்காவை திருப்திப்படுத்தத்தான்

இவர்களுக்கு பாகிஸ்தான் அரசும் உதவுவதில்லை. அத்தியாவசிய வசதிகளை செய்து தருவதில்லை; காரணம் கேட்டால் முகாம்களுக்கு முறையான கூரைகளை அமைத்துக் கொடுத்தால் எங்கே இன்னும் கூட்டம் கூட்டமாக அகதிகள் வரத்துவங்கி விடுவார்களோ என்று பயந்துதான் பாகிஸ்தான் அரசு இவர்களைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறது என்று கூறப்படுகிறது.

இன்னும் கொஞ்சம் அதிகம் போய், அகதிகளை திரும்பப் போகச் சொல்லி பாகிஸ்தான் அரசு வற்புறுத்துகிறதாம். அகதிகளை ஆப்கானுக்கள் திரும்பப் போகச் சொல்லி பாகிஸ்தான் அதிகாரிகள்

நிர்ப்பந்தித்து வருகிறார்களாம். யாரை திருப்திப் படுத்த பாகிஸ்தான் அரசு இப்படி செயல் படுகிறது என்பது தெரிந்த விஷயம்தான்.

சிலரை வலுக்கட்டாயமாக ஆப்கானுக்குள் துரத்தியும் வருகிறார்கள். உயிர் பிழைத்து தப்பி வந்த மக்களை மனிதநேயமின்றி பாகிஸ்தான் நடத்துவது நன்றாக இல்லை.

ஒரு குப்பை கொட்டும் நிலம் போல் காட்சியளிக்கும் அந்த முகாமின் மக்கள் கைகளில் பிளாஸ்டிக் பொலிதீன் பைகள் வைத்துள்ளனர். அதுதான் அவர்களுக்குக் கூரை. போனால் போகட்டும் என்று சில டென்ட்கள் அங்கு ... ரேப்புளை ... உயரம் ... வெறும் ... 90 cm ... தான்.

ஒரு ... டென்டுக்குள் ... அதிகம் ... போனால் ... பத்துப் ... பேர் ... இருக்கலாம் ... நெருக்கி அடித்து 25 பேருக்கு மேல் நுழைகிறார்கள்.

### மலம் மிதந்து வந்தது

நாங்கள் அங்கிருக்கும் போது மழை பெய்தது. அந்தத் தண்ணீரில் மனிதக் கழிவுகள் (மலம்) மிதந்து டென்டுக்குள் தாராளமாகப் புகுந்து கொண்டன. கழிவறைகள் ஆழமின்றி இருப்பதால் இது சர்வசாதாரணமாக நிகழும் என்று அகதிகள் கூறினார்கள். எனக்கு நெஞ்சே அடைத்து விட்டது.

திடீரென்று ஒரு வயதான மூதாட்டி என் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு டென்டுக்குச் சென்றார் அங்கு அன்றிரவு பிரசவமான பெண் ஒருத்தி நடுங்கிக் கொண்டிருந்தார்."இவளுக்கு வலி", உயிர் போகிறதாம். ஜன்னி வந்து விடும்போல் இருக்கிறது. வைத்தியம் பாருங்களேன்" என்றார் பரிதாபமாக. அந்தப் பெண்ணை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஆயத்தமானோம். ஆனால் அவள் வர மறுத்துவிட்டாள் "நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றால் இதோ இங்கிருக்கும் இந்த இரண்டு குழந்தைகளை யார் கவனிப்பார்? ஏற்கனவே அவர்கள் பசியால் துடிக்கின்றனர். ஒரு ரொட்டி கிடைத்தால் பிய்த்து கொடுத்து விடுவேன்" என்று வர மறுத்து விட்டார். என் வேதனை இன்னும் அதிகமானது. அந்த டென்டுக்களில் இருந்தது அடுப்பில் சுடு நீரும், காய்ந்து போன ரொட்டியும் தான்.

திடீரென்று ஒரு வயதான மூதாட்டி என் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு டென்டுக்குச் சென்றார். அங்கு அன்றிரவு பிரசவமான பெண் ஒருத்தி நடுங்கிக் கொண்டிருந்தார்."இவளுக்கு வலி, உயிர் போகிறதாம். ஜன்னி வந்து விடும்போல் இருக்கிறது. வைத்தியம் பாருங்களேன்" என்றார் பரிதாபமாக. அந்தப் பெண்ணை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஆயத்தமானோம். ஆனால் அவள் வர மறுத்துவிட்டாள். "நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றால் இதோ இங்கிருக்கும் இந்த இரண்டு குழந்தைகளை யார் கவனிப்பார்? ஏற்கனவே அவர்கள் பசியால் துடிக்கின்றனர். ஒரு ரொட்டி கிடைத்தால் பிய்த்து கொடுத்து விடுவேன் " என்று வர மறுத்து விட்டார். என் வேதனை இன்னும் அதிகமானது.

பல குழந்தைகள் பசியால் அழுதாலும் இன்னொரு அகதியின் ரொட்டி அருகில் இருந்தாலும் தொடுவதில்லை. இந்தக் காட்சி என்னை மிகவும் நெகிழச் செய்தது.

மற்றொரு டெண்டில் மூதாட்டியும் மூன்று குழந்தைகளும் பசியால் அழுது கொண்டிருந்தனர். குழந்தைகளின் பெற்றோர் யுத்தத்தில் மரணமடைந்து விட்டனராம். நடக்கக்கூட முடியாத அந்தப் பாவப்பட்ட பிஞ்சு மனங்களின் கால்கள் போலியோவினால் கூம்பிக்கிடந்தன. என்னால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "பாருங்கள் நம் நிலைமையைப் பார்த்து இந்த அந்நிய நாட்டுப் பெண் அழுகின்றாள்" என்று கூறிக் கொண்டு, "விடுங்கள் அம்மா, இது இறைவனின் சோதனை. பொறுமையாளர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்" என்று அல்லா கூறியுள்ளான் என்று எனக்கு ஆறுதல் சொன்னார்கள்.

"புத்தர் சிலைகளுக்காக ஒரு நேரத்தில் ஒட்டு மொத்த உலகமே கவலைப்பட்டது. சிலைகளுக்காகப்படும் கவலையில் மனிதர்களுக்காக கொஞ்சம் படக்கூடாதா?" என்று ஒரு பெரியவர் கேட்டார். "மனித உரிமைகள் எல்லாம் வாய் வார்த்தைதான்" என்றார் அவர்.

இந்த முகாமில் இருக்கும் பலர் வட ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள்வடக்கிலுள்ளோருக்கும், தாலிபான்களுக்கும் இடையே நிகழ்ந்த உள்நாட்டு மோதல்கள் ஒரு புறம் அவர்களை சோர்வுறச் செய்துள்ளன. போரினால் பல பெண்கள் கணவர்களை இழந்து குழந்தைகளுடன் நிர்கதியாக நிற்கிறார்கள். அதே ஆப்கானுக்கு எதிரான போர் தொடுக்கப்பட்டு விட்டது. ஆள்தான் வேறு நேற்று ரஷ்யா, இன்று அமெரிக்கா.

## இழப்புக்கள் ஏராளம்!

கணவனை இழந்த ஒரு பெண் கூறினார். "எங்களுக்கு அழகான வீடு இருந்தது. இன்று எல்லாவற்றையும் இழந்து உயிருக்குப் பயந்து இங்கு ஓடிக் கொண்டிருக்கின்றோம். அங்கே இருந்திருந்தாலாவது பெருமையுடன் மரணத்தை தழுவி இருக்கலாம்" என்று வேதனை பொங்க............

அந்த முகாமில் காலரா, மலேரியா, வைரஸ், காய்ச்சல் இன்னும் ஏதேதோ வியாதிகள் வேகமாகப் பரவி வருகின்றன. குழந்தைகளின் அவலக்குரல்கள் தான் கல் நெஞ்சையும் கரைக்கச் செய்து விடுகிறது.

ரஷ்யா போரின் போது ஏற்கனவே பாகிஸ்தானுக்குள் தஞ்சம் புகுந்து இரண்டு மில்லியன் ஆப்கான் மக்களை பாகிஸ்தான் அரசு திருப்பி அனுப்பியது. பாகிஸ்தானும் அகதிகளுக்கு இடம்

> நாங்கள் அங்கிருக்கும் போது மழை பெய்தது. அந்தத் தண்ணீரில் மனிதக் கழிவுகள் (மலம்) மிதந்து டென்டுக்குள் தாராளமாகப் புகுந்து கொண்டன. கழிவறைகள் ஆழமின்றி இருப்பதால் இது சர்வசாதாரணமாக நிகழும் என்று அகதிகள் கூறினார்கள். எனக்கு நெஞ்சே அடைத்து விட்டது.

கொடுத்துக் கொடுத்து சொந்த மக்களுக்கு வேலை வாய்ப்பில்லாத நிலையை உண்டாக்கி விட்டது என்று தன்னிலை விளக்கமளித்திறது.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இடம் கொடுத்தால் எங்கு அமெரிக்கர்களது கோபப்பார்வை தங்கள் மீது விழுந்து விடுமோ என்ற அச்சம் தான் பாகிஸ்தானை இந்த நிலைப்பாட்டை எடுக்கச் செய்துள்ளது.

அனைத்துலக அனுதாபம் ஆப்கானிஸ்தான் மீது விழாமல் இருக்க சிலர் கவனமாக இருக்கிறார்கள். உதவி வந்த ஒரு சில நாடுகளும் கைகளை பின்னுக்கு இழுத்துக் கொண்டுள்ளன.

### ஐ.நா ஏன்?

ஐ.நா. எதற்காக உதவ மறுக்கிறது? என்பதுதான் கேள்வி. ஐ.நா. சபையின் விதிகளில் சர்வதேச அகதிகள் பற்றிய விதிகள் தெளிவாக இருக்கின்றன. ஆனால் ஐ.நா அதை அடையாளப்படுத்தத் தயங்குகிறது.

பாகிஸ்தான் தனது நிலையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அனைத்துலக சமுதாயமும் பாகிஸ்தானுக்கு மட்டும் ஆப்கானிஸ்தான் அகதிகளை நிரப்பி அனுப்பாமல் பாரத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் வேண்டும்.

முதலில் பாகிஸ்தான் யாரை திருப்திப்படுத்த முனைகிறதோ அந்த எஜமானர்கள் முக்கியமா? தனது சகோதரர்கள் முக்கியமா? என்பதை யோசித்தால் நன்றாக இருக்கும்.

அந்த பாவப்பட்ட மக்கள் மீண்டும் சகஜவாழ்வு வாழ பிரார்த்திப்போம் என்று முடித்தார் ஜெமீமாகான்.

-த.நெருப்பன்



## மொபைல் பெண்டியம்III

நாளுக்கு நாள் புதிய தொழினுட்பங்களுடனும், பல வடிவங்களிலும் கணனிகள் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. தற்போது லப்ரொப் (Laptop) கணனிகளின் பானை அதிகரித்துள்ளது.

எனவே, இன்றைய சந்தை நிலைக்கேற்ப ஐபிஎம்(IBM)நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ள லப்ரொப்(Laptop) கணனியே மொபைல் பெண்ரியம்III(Mobile Pentium III).

இது, 700MHz வேகத்தையுடைய பென்ரியம் IIIபுரோஸஸர் (Pentium III Processor), 10GB கொள்ளளவுடைய ஹார்ட் டிஸ்க்(Hard Disk), 64MB மெமரி (Memory) ஐக்கொண்ட ரம்(RAM) ஆகியவற்றைக் கொண்டுள்ளது. விண்டோஸ்2000 ஒப்ரேட்டிங்சிஸ்ரத்தில் இயங்கக்கூடியது.

6.4 டடிள நிறையுடைய இக்கணனியின் திரை 12.7 அங்குலமாகும். மேலும், இது ஸ்பீக்கர் போன், ஹெட்போன் ஆகியவற்றையும் இணைக்கக்கூடியது, இதன் சிறப்பம்சமாகும்.

இதன் விலை இலங்கை ரூபாயில் 1,65,000 ஆகும்.

# தமிழவன் கேள்வி பதில் பகுதி

சி. சுகு
நீர்வேலி

*தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் அரசிற்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று இறுதி ஒப்பந்தத்தில் இருபகுதியினரும் கையொப்பமிட சாத்தியமுள்ளதா?

பேச்சுவார்த்தை இடம்பெறும் ஆனால் இறுதி ஒப்பந்தத்தில் கையொப்பமிட சாத்தியம் குறைவாகவே உள்ளது. அவ்வாறு இடம் பெற்றால் எல்லோருக்கும் நன்றே.

த. இந்துமதி
பளை, தம்பகாமம்

*"காதல்' தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

இது பலவகைகளில் இருக்கும். காதல் என்ற மூன்றெழுத்து புனிதமானது இந்தப் புனிதமான காதலை புரியாதவர்கள் பின்னர் கவலைப்படுவதும் உண்டு. உங்களிற்கு பதில் தருவது கூட ஒருவகை காதல் தான்.

T. மனோ
மானிப்பாய்

*பெண்களிற்கு உடை அழகா? நடை அழகா? அழகு?

பெண்களிற்கு இரண்டும் அழகுதான்.

இ. ரூபி
திருநெல்வேலி

*ஆண்கள் ஏன் பெண்களை விழுங்குவது போன்று பார்க்கிறார்கள்?

பசியில் திரிகின்றார்கள் போலும்.

வ. நந்தன்
வல்வெட்டித்துறை

*தற்போது கூடுதலான பெண்கள் ஆபாசமாக உடை அணிந்து செல்கிறார்களே இவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

நான் பலதைநினைப்பதுண்டு ஆனால் துணி பெரியளவில் விலை ஏறியதாக தெரியவில்லை காற்று வாங்கும் எண்ணமாகவும் இருக்கலாம் தானே. அவர்களிற்குத்தான் உண்மை தெரியும் முடிந்தால் கேட்டுப்பாரும்.

யு. அன்ரன்
மாணவர் விடுதி – மன்னார்

*யாழ்ப்பாணத்தில் இளைஞர்களிடையே சமூக வன்முறைகள் அதிகரிக்கக் காரணம் என்ன?

திருத்தக் கூடியவர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாமை தான் பிரதான காரணம்.

**வி. குமாரி**
**சாவகச்சேரி**

**தமிழ் இனத்திற்கு எப்போது விடிவு கிடைக்கும்?*

விரைவில் விடிவு பிறக்கும். தற்போது கூட விடியலை நோக்கியே தமிழ் இனம் வீறு நடை போடுகிறது.

**வே. சாமினி**

**யாழ் பல்கலைக்கழகம்**

**தமிழ் கட்சிகள் ஒன்று சேர்ந்து தேர்தல்களத்தில் குதித்து வெற்றிபெற்றது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

மகிழ்வடைகிறேன் ஆனால் இந்த தமிழ் கட்சிகள் தமிழ்தேசிய ஒற்றுமை முன்னணி என்ற பெயரில் கட்சியை பதிவு செய்வதே நல்லது.

**ச. சரவணன்**
**நல்லூர்**

**வடக்கு அபிவிருத்தி அமைச்சுப் பதவி ஏன் மகேஸ்வரனிற்கு வழங்கப் படவில்லை? இதுதமிழ் இனத்திற்கு பாதிப்பு அல்லவா?*

தற்போது இந்து சமய அமைச்சுப்பொறுப்பை வகிக்கும் அமைச்சர் தி. மகேஸ்வரனிற்கு வடக்கு அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கும் பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடமே உள்ளது. தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் தமிழ் இனத்தின் இலட்சியம் அமைச்சுப் பதவி பெறுவதற்கல்ல. அமைச்சுப் பதவி பெறுவதற்காக பெறுமதி மிக்க தமது இன்னுயிர்களை இந்த மண்ணிற்கு தமிழ் இனம் ஈகம் செய்யவும் இல்லை. தமிழ் இனம் தம்மைத்தாமே ஆட்சி செய்யவே விரும்புகிறது. தமிழ் இனத்திற்கு இனத்தின் இலட்சியப் போராட்டத்தில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

**த. வசந்தி**
**வண்ணார்பண்ணை**
**யாழ்ப்பாணம்**

**சீதனம் வாங்கும் ஆண்கள் பற்றி என்னநினைக்கிறீர்கள்?*

உழைக்கத் தெரியாதவர்கள் இவர்கள் பணத்திற்காக உங்களை திருமணம் முடிக்கின்றார்கள். யோசிக்க வேண்டியதில்லை எப்போதும் இப்படிப்பட்ட ஆண்கள் உங்களிற்கு கீழே தான்.

# உடனடிப் படப்பிடிப்பு

வெற்றிக் கொடி காட்டியுள்ள தனது உடனடிப் புகைப்படத் தொழிலை மேலும் பலப்படுத்த, அமெரிக்க மசாசூட் மாநிலத்தில் உள்ள பொலொறொயிட் கோர்ப்பரேஷன் என்ற நிறுவனம், புதியதோர் அனைத்தும் உள்ளடங்கிய ஒற்றை லென்ஸ் பிரதிபலிப்புக் கமிராவை அறிமுகப்படுத்தியுள்ளது. அதற்குப் பெயர் கப்டிவா என்பதாகும். பல நூறு மில்லியன் டொலர் செலவில் ஆய்வுகள் நடத்தி அந்த நிறுவனம் அமைத்துள்ள புதிய கமிரா, வழமையான பொலொறொயிட் உடனடிக் கமிராக்கள் அளவில் பெரியவையாகவும், கொண்டு செல்வதற்குச் சிரமமான வையாகவும், உள்ளன என்று கூறும் பாவனையாளர்களின் எண்ணத்தைப் பிரதிபலித்து ஆக்கப்பட்டதாகும். கப்டிவா தனக்கு முந்திய மாதிரியிலும் 40 விகிதமளவில் சிறியது. அது படம் எடுக்கப்பயன்படுத்தப்படாத வேளையில் ஒரு 35 மி.மீ கமிராவைப் போலவே கச்சிதமாகத் தோன்றும். ஆனால் படம்பிடிக்கத் தேவைப்படும் பொழுது பாவனையாளர் அதனைத் திறந்து வழமையான உடனடிப் படப்பிடிப்புக் கமிராவின் முக்கோண வடிவத்திற்கு ஆக்குவார். எந்த உடனடிக் கமிராவையும் போலவே கப்டிவாவும் அமுக்கியை அழுத்தியவுடனேயே படத்தைத் தயாரித்து வெளியே தரவல்லது. ஆனால் புதிய கமீராவில் பாவனையாளர்கள் உடனே படத்தை வெளியே எடுக்க வேண்டியதில்லை. அத்துடன் தான் பிடித்த படம் உள்ளே ஒளி ஊடுருவும் படங்கள் சேகரித்து வைக்கும் பகுதியில் உருப்பெறுவதைக் காணலாம். அதனுள் பத்துப் படங்கள்வரை களஞ்சியப்படுத்த முடியும். படம் நன்கு உருப்பெற்ற பின்பு வெளியே எடுக்கலாம்.

கொண்டு செல்வதை வசதியாக்கப் பொலொறொயிட் படங்களின் அளவையும் குறைத்துள்ளது. படங்கள் நீள்சதுரமாக 5×8 செ. மீ அளவினதாகும். முந்திய மாதிரிப் படங்கள் ஓரளவு சதுரமும் அளவு சிறிது கூடியவையுமாகும். அமெரிக்காவில் விலை 120 முதல் 130 டொலர். ஜப்பானில் அது ஜோய்காம் என்ற பெயரிலும், ஐரோப்பாவில் விஷன் என்ற பெயரிலும் விற்பனையாகிறது.

மாணவர் பக்கம்

## இரத்தப் பரிசோதனை

இருதயநோய் ஆபத்துக்களைக் கணிக்க உதவும், கொலெஸ்திரோல் பரிசோதனை வழக்கமாக வைத்திய சாலைகளிலும், வைத்தியர்களின் காரியாலயங்களிலும் தான் செய்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இப்பொழுது கலிபோர்னியாவில் சனிவேல் நகரில் உள்ள கெம்றெக் என்ற வர்த்தக நிறுவனம் ஒருமுறை பாவித்துப் பரிசோதித்த பின்பு வீசிவடக்கூடிய "அக்கூமீற்றர்" என்ற ஒரு சாதனத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. அதனைப் பாவனையாளர்கள் தங்கள் வீடுகளில் இருந்துகொண்டே உபயோகிக்கலாம். முதலில் பாவனையாளர் தனது விரலில் குத்தி, ஒன்று அல்லது இரண்டுதுளி இரத்தத்தை இந்தச் சாதனத்தில் அதற்கென உள்ள இடத்தில் விழச்

செய்வர். அதன் பின்பு அந்தக் குருதி ஓர் அடைக்கப்பட்ட அறைப்பகுதியொன்றிற்குள் செல்லும். அதற்குச் சுமார் இரண்டு நிமிடம் அளவு செல்லும். அதன்பின்பு பாவனையாளர் ஓர் அமுக்கியை அழுத்தியதும்அது பரிசோதனை நடக்கும் இடத்திற்கு உரிய இரசாயனங்களைச் செலுத்தும். அந்த இரசாயனங்கள் சுமார் ஐந்து நிமிட அளவு நேரத்தில் அந்தக் குருதியுடன் கலக்கும். அதன் பின்பு அச்சாதனம் நன்றாக இயங்குகிறது என்பதைப் பாவனையாளருக்கு அறிவிக்க ஒரு நாவல் நிறப்புள்ளி அந்தக் கருவியின் ஜன்னல் பகுதியில் தெரியும். அடுத்துப் 15 நிமிடங்களுக்குப் பின்பு வேறு ஒரு ஜன்னலில் அளவைக் குறியீடுகள் போடப்பட்ட இடத்தில் ஒரு பச்சைப்புள்ளி தோன்றிப் பரிசோதனை கொலஸ்திரோல் அளவைப் பரிசோதித்தவர் அறிந்துகொள்ள சாதாரண தேர்மொ மீற்றரைப் பார்ப்பது போல் அந்தச் சாதனங் காட்டும் அளவைப் பார்த்துவிட்டு, அதனை அந்தச் சாதனத்துடன் தரப்படும் ஓர் அட்டவணையுடன் ஒப்பிட்டுத் தனது இரத்தத்தின் கொலஸ்திரோல் மட்டத்தை அறிந்து கொள்ளலாம். அந்தச் சாதனங் கொண்டு குருதிச் சோதனை செய்து தரப்படும் முடிவுகள் ஒரு வைத்திய ஆய்வுகூடத்தில் சோதனை செய்து பெறப்படும் முடிவுகளைப் பொல் சரியானவையாக இருப்பதாக அதன் உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். ஆனால், அதிகக் குருதிக்கசிவுள்ள உடற்பாங்கினரும், உடற் குருதியை மென்மையாக்க மருந்து உட்கொள்வோரும் இந்த அக்கூ மீற்றரைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் விரலிற் குத்துவதால் அதிக இரத்தப்பெருக்கு ஏற்படலாம்.

## தொலைபேசி மூலம் படம் அனுப்பலாம்

அமெரிக்க ரெலிபோன் அன்ரெல்லிகிராப் நிறுவனத்தின் (American Telephone and Telegraph Inc) பிக்காசோ (Picasso Telephone) தொலைபேசி இணைப்பு உங்களிடமும், உங்கள் நண்பரிடமும் இருந்தால் 5 இலிருந்து 40 நொடிகளுக்கிடையில் தேவையான படத்தை நீங்கள் சாதாரண தொலைபேசி மூலம் பெறலாம். இந்த ரகத் தொலைபேசி இணைப்பைவிட இதே தேவைக்கு இன்னும் பல தயாரிப்புக்கள் உள்ளன. ஆனால், இந்த 'பிக்காசோ' இணைப்பு வேறு இனங்களிலும் பார்க்க ஆயிரம் டொலர் குறைவாகும். 'பிக்காசோ' இணைப்பொன்றின் விலை 3, 295 டொலர். நீங்கள் உங்கள் வீடியோ கமரா மூலமாகவோ எடுத்த படங்கள் யாவும் இவ்வாறு அனுப்பலாம். படம் அனுப்பும் தொழில் நுட்பம் என்று தொழில் சார் அறிவிப்பொன்று தெரிவிக்கின்றது. (Compression Technology)

**"பிறகென்ன கனடா மாப்பிள்ளைக்கு, இங்கிருந்தே பெண்ணின் படத்தை அனுப்பி விடலாமே.....**

## இலத்திரனியல் பூட்டும், திறப்பும்

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு சில்லு மிதிவண்டிகள், பனிச்சறுக்கிகள், பொதிகள், பிரயாணப்பைகள், விளையாட்டு உபகரணங்கள் போன்ற பல்வேறு பொருள்களைத் திருடர்களிடமிருந்து காக்க அமெரிக்காவின் பிரியோ கோர்ப்பரேஷன் இலத்திரனியல் பாதுகாப்புடன் பூட்டுத் திறப்புகளைச் செய்து விற்பனைக்கு விட்டுள்ளது.

துவிச்சக்கரவண்டிப் பூட்டு ஓர் இறாத்தல் நிறையும், மோட்டார் சைக்கிள் பூட்டு 3. 7 இறாத்தல் நிறையுங் கொண்டவையாகும். இந்தப் பூட்டுக்களுடன் உரிமையாளர் அல்லாதோர் திருடும் எண்ணத்துடன் செயற்படத் துணிந்தால் அவை பெருந் தொனியில் செவிப்பறை சிதையும் வண்ணம் விசில் அடிக்கும். இந்த விசில் சத்தம் 107 டெசிபெல் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பூட்டுக்கள் சந்தைப்படுத்தப்படுவது இதுவே முதற்றடவையென்று சொல்லப்படுகின்றது.

## ஓர் அமெரிக்கப் பாரம்பரியம்

போட் (Ford) கார் நிறுவனம் பன்னெடுங்காலத்திற்கு முன் விற்பனைக்கு விட்ட முஸ்ராங் (Mustang) என்ற பெயருடைய கார் பெரு வரவேற்பைப் பெற்று இன்று அது ஓர் அமெரிக்கப் பாரம்பரியமாக மாறி விட்டது. சில காலம் தயாரிப்பில் இல்லாத இக் கார் இப்போது மீண்டும் 1994 ஆம் ஆண்டிற்குரிய தொழல் நுட்பமுன்னேற்றங்களுடன் வெளிவந்துள்ளது. இதில் இரண்டு விதமான சக்திகொண்ட இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. – 140 குதிரைப் பவர், வீ 6 ரக எஞ்சினும்; 215 குதிரைப் பவர் வீ 8 எஞ்ஜினும் வாங்குவோர் தெரிவுக்குத் தரப்பட்டுள்ளன. விலைகள் குறிப்பிடப்படவில்லை.

## குரல் பெட்டி

கலிபோர்னியாவிலுள்ள நொறிஸ் கொம்யூனிகேஷன்ஸ் என்ற நிறுவனம் பிளாஸ் பக் (Flashback) என்ற பெயரிடப்பட்ட ஒலிப் பதிவு ஒன்றைச் சந்தைக்கு விட்டுள்ளது. அது தன்னகத்தே 16 பிட் கொம்பியூற்றர் சிப் ஒன்றினுள் 2 மணி நேரம் நீடிக்கும் பேச்சையோ, செய்தியையோ, வேறு ஏதும் ஒலிப் பதிவையோ பதிவு செய்து கொள்ள வல்லது. அந்த 30, 60, 120 நிமிட நேர அளவுகளுக்கு ஏற்ப வரும் சிப்களில் பதியப்பட்டுள்ள ஒலி பின்பு கணனியில் அந்தச் சிப்பைப் பொருத்தி ஒலிக்கச் செய்யப்படவோ, அல்லது வேறு கணனிகளில் பதிவு செய்ய அனுப்பப்படவோ இயலும். இயக்குபவரின் விருப்பப்படி செயற்படுத்த உள்ள இரண்டு அமுக்கிகளால் நாடாவைத் திரும்பவும் சுற்றச் செய்யவோ, வேகமாக முன்னேற வைக்கவோ, அல்லது இடைநடுவில் நிறுத்தவோ இயலும். நிலையான அளவிலான குரல் ஒலியில் பதிவு செய்துள்ள ஒலியை வேகமாகவோ. மெதுவாகவோ வெளிவரச் செய்யலாம். முனபு பதிவு செய்துள்ள ஒலிப்பதிவின் இடையில் ஏற்கனவே பதிவாகியுள்ளதற்கு எவ்வித பாதிப்புமின்றிப் புதிதாக மேலும் ஒலிப்பதிவு செய்யவும் முடியும். அந்தச் சாதனம் சட்டைப் பையில் கொண்டு செல்லத் தக்கதும், 3 அவுன்சுக்கும் குறைவான நிறை உடையதாயும் அதனகத்தே அசையும் பாகங்கள் எதுவும் அற்றதாகவும் அமைந்துள்ளது. இரண்டு AA மின்கலங்கள் இருந்தால் தொடர்ந்து 3 மணி நேரம் அது ஒலிப்பதிவு செய்யும். விலை 200 டொலர்.

சூழலுக்குத்தீங்கு இழைக்காததும், வரையறுக்கப்படாத காலத்திறகுப் பயன்படுத்தத்தக்கதுமான மேலதிக கொம்பியூற்றர் சிப்ஸ் விலை 70 டொலர்.

## அணுவில் இயங்கும் மணிக்கூடு

கம்பிச்சுருளைக் கையால்முறுக்கிவிடும் புராதன நேரங்காட்டிகளிலிருந்து நேரடி மின்சாரம், மின்கலன் மின்சாரம் போன்றவற்றில் இயங்கும் மணிக்கூடுகள் வரை இன்று பாவிப்பில் இருக்கின்றன. ஆனால், இவை யாவற்றிற்கும் பொதுவான அம்சம் இருக்கின்றது. இவையொன்றும் சரியான நேரங் காட்டுவதில்லை! சில நொடிகளாவது இவை முந்தவோ, பிந்தவோ செய்கின்றன. இது தவிர்க்க முடியாதென்று பல நேரங்காட்டித் தயாரிப்பாளர்களால் கை விரிக்கப்பட்டுள்ளது. என்றாலும் அமெரிக்கப் பிரமாணங்களுக்கும், தொழில் நுட்பத்திற்குமான தேசியக் கழகம் (National Institute of Standards & Technology) மூன்று மில்லியன் வருடங்களில் ஒரு நொடிமாத்திரம் இழக்கும் அணுசக்தி நேரங்காட்டியைச் செய்தமைத்துள்ளது. ஓர் நீண்ட குழாயில் லேசர் ஒலிக்கதிர்களால் செசியம் அணுக்கள் வழி நடத்தப்படுகின்றன. இந்த செசியம் அணுக்களின் இயற்கையான அதிர்வுகளைக் கணக்கு எடுத்தே நேரக் கணிப்பு நடைபெறுகின்றது. இதுவே இந்த ரக நேரங்காட்டியின் அடிப்படை விளக்கம். இந்த நேரங் காட்டிக்கு என். ஐ. எஸ். ரி-7 என்ற (NIST-7) குறியீடு கொடுக்கப்பட்டுள்ளது. உலக நேரம், அமெரிக்க தேசிய நேரம் போன்றவை இந்தக் கருவியின் உதவியுடன்நிர்ணயிக்கப்படுகின்றன.

## ரீ. வீ. கேம்ஸ் T. V. GAMES

சிறு பிள்ளைகளின் விளையாட்டுப் பொருள்களாக ஆரம்பித்த தொலைக்காட்சிப் பெட்டியில் இணைத்து விளையாடம் ரீ. வீ. கேம்ஸ், இன்று வயது வித்தியாசமின்றி யாபேருக்கும் ஒரு புதிய உலகத்தைத் திறந்து விட்டுள்ளது. இந்த விளையாட்டுக்களில் முப்பரிமாணம் (3டி) சேர்க்கப்பட்டபின் இதன் பிரயோகம் எல்லையற்றதாகி விட்டதெனலாம். விளையாட்டின் போது தொலைக்காட்சித் திரையில் தோன்றுபவை யாவும் உயிருள்ளவைபோன்று காட்சி தருவதும், விளையாடுபவர்கள் நினைத்தவாறு அவைகளை அசைத்துப் போட்டியிடுவதும், இன்று முப்பரிமாண மகிமையால் கைவரப்பெற்ற சித்திகளாகும். எதிர்காலத்தில் இத்துறையில் முப்பரிமாணஞ் செய்யப்போகும் திருவிளையாடல் அளப்பரியது. அண்மையில் நாஷனல் பனசோனிக் சந்தைப்படுத்திய 3 டீ ஓ மல்ரிபிளேயர் (3 Do Multiplayer) முன்பு இத்துறையில் விற்பனைக்கு விடப்பட்ட எல்லாவற்றிலும் பார்க்க 50 மடங்கு வேகமுள்ளது என்றும், விளையாடுபவர்களின் கற்பனை வளத்தால் இதைப்பல்வேறு

விதத்தில் பயன்படுத்தலாம் எனறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் விலை 700 அமெரிக்க டொலர்.

## உதை பந்தாட்டத்தில் ஈடுபடுவோர் அணியும் புதிய ரக காலணி

1994 காற்பந்துப் போட்டிகள் நிறைந்ததோர் ஆண்டு. இதைப் பயன்படுத்த இந்த விளையாட்டுக்காக உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் தயார் நிலையில் இருக்கின்றன. ஜேர்மனியின் அடிடாஸ் (Adidas) நிறுவனம் உலகில் காணப்படும் பல்வேறு விளையாட்டுக்களுக்குத் தேவையான ஆடைகள், காலணிகள், பந்து போன்ற உபகரணங்கள், வேறு பல உதவிப்பொருள்கள் தயாரிப்பதில் முன்னணியில் இருக்கின்றது. நட்சத்திர நிலையிலுள்ள விளையாட்டு வீரர்களும், நாடுகளும் அடிடாஸ் தயாரிப்புக்களைத் தேடி வாங்குகின்றனர் மிக உயர்ந்த தரக்கட்டுப்பாடும், மிக முன்னேற்றகரமான தயாரிப்பு முறைகளையும் அடிடாஸ் பின்பற்றுவதே காரணம். உதைபந்தாட்டத்திற்குத் தேவையான புதியரக காலணிச் சோடியை உலக கிண்ணப் போட்டிகளுக்குத் தனது பங்களிப்பாக அடிடாஸ் நிறுவனம் (பெயர்ப் பொருத்தத்தைக் கவனியுங்கள்) வழங்கியுள்ளது. பந்தைத் தூரம் உதைப்பதற்கும், கட்டுப்பாடாக எடுத்துச் செல்வதற்கும் இந்தக் காலணி உதவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மனித உதவி இன்றி இக்காலணி தனித்து இயங்கமுடியாததை இவ்விடத்தில் ஒத்துக்கொள்ளவேண்டியுள்ளது. இந்தக் காலணியின் அடிப்பாகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் 'லாடன்கள்' சறுக்கலைத் தவிர்க்கின்றன. ஓட்டத்தை எளிதாக்குகின்றன.

அடிடாஸ் தயாரிப்புக்கள் எப்போதும் விலை கூடியவை. இக் காலணிச் சோடியின் விலை 150 டொலர்.

## புதிய மிருகமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

புதிய புதிய கிருமிகயையும் பூச்சிகளையும்,



கண்ணுக்குப் புலப்படாத உயிரினங்களையும் விஞ்ஞானிகளும், உயிரின வல்லுநர்களும் கண்டு பிடித்த வண்ணமுள்ளனர். ஆனால் பல தசாப்தங்களாக மிருகங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகச் செய்திகள் எட்ட வில்லை. இதற்கு விதி விலக்காக ஓர் அதிசயத் தகவல் வந்துள்ளது. வியட்நாம் காடுகளில் ஆடு, மாடு இனத்தைச் சேர்ந்த நீண்ட இரு கொம்புகளுடைய மிருகம் ஒன்று வேட்டைக் காரர்களால் இனங்காணப்பட்டுள்ளது. இது 'போவிற்ஸ்' (Bovids) அதாவது

இரை மீட்கும் ஆடு மாடு இனத்தைச் சேர்ந்தது என்று மிருகவியல் வல்லுநர்கள் உறுதியாகக் கூறியுள்ளனர்.

**இப்படியொரு மிருகம் தான் முன்பு தங்களைக் கலைத்துக் கலைத்து விரட்டியது என்று அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் முணுமுணுக்கிறார்.**

## 100 இசைத் தட்டுக்களை இயக்கும் கணனிப் பொறி

சேர்ந்திருக்கும் கசெற் இணைப்பு இன்று உலகின் பல பாகங்களில் மறைந்து வருகின்றது. முன் பொருகால பாட்டுப்பெட்டியென்றும், கிராம போன் என்றும் அழைக்கப்பட்ட கருவியில் பயன்படுத்தப்பட்ட இசைத்தட்டு இப்போது சிறிய அளவில் கூடுதலான விஷயங்களை அடக்கியவாறு 'சீடி' என்ற பெயருடன் கசெற்றின் இடத்தைப் பிடித்துள்ளது. (சீடி என்றால் சிறியளவு தட்டு – (Compact Disc) இன்று இந்தச் சீடியைச் சுற்றிப் பல உபகரணங்கள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளன. தட்டுக்களைப் பாடகர் வாரியாகவும், மொழி வாரியாகவும், இசையின் தன்மை வாரியாகவும் அடுக்கி வைத்திருக்கும் தட்டுக்கள் 'இறாக்கைகள்' முதலியன சந்தைப்படுத்தப்பட்டுள்ளன.

ஜப்பான் நாட்டு 'சொனி' ஸ்தாபனமும் தனது பங்களிப்பாக 100 தட்டுக்களைத் தன்னகத்தே அடக்கவும், தேவையான தட்டை நொடிப்பொழுதில் இயக்கவும் கூடிய வசதிகளுடன் 'சீ. டீ. பி-சி எக்ஸ் 100 என்ற பெயருடன் ஒரு பொறியைச் சந்தைப்படுத்தியுள்ளது. இதில் உள்ளடக்கப்பட்ட கணனியின் உதவியுடன் இந்தக் கருவியில் அடுக்கப்பட்டிருக்கும் 100 சீடீ களின் விபரங்கள் யாவும் இதன் ஞாபகத்தில் பதியப்பட்டிருக்கும் விரும்பிய விஷயத்தைக் கேட்க இந்தப் பதிவுகளின் உதவியுடன் சில நொடிகளில் தெரிவு செய்யலாம். அடுத்ததாக இந்த 'சீடிபி' கொம்பக்ற் டிஸ்க் பிளேயர் (சிறியளவு தட்டு இசைக்கருவி) உங்கள் ஆணைக்குட்பட்டு இசை விருந்தளிக்கும். இதன் விலை 1, 200 டொலர்.

**அது சரி சைக்கில் டைனமோவில் இது இயங்குமோ என்று யாழ்ப்பாண இரசிகர் ஒருவர் கேட்கிறார்.**

## இருக்கை வசதி கூடிய கார்

அமெரிக்காவில் மிகவும் விலை உயர்ந்த கார் கடிலாக் (Cadillac) என்ற இனக்காராகும். 1994 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட இந்தக் கார் ஆறு வயது வந்தவர்களை மிகவும் சொகுசாக ஏற்றிச் செல்லும். இது 270 குதிரைச் சக்திகொண்ட எஞ்சினும், சறுக்கல் இன்றிச் செல்லும் பாதுகாப்பும், முன் இருக்கையில் சவாரி செய்யும் மூன்று நபர்களுக்கும் தகுந்து காற்றுப்பை அரணும் தருகின்றது. இந்த உல்லாசக் கார் இம்முறை புதிய வடிவமைப்பில் வந்துள்ளது விலை 36, 600 டொலர்.

# பொது அறிவு

- சர்வதேச நீதி மன்றம் - INC
- சர்வதேச தொழிலாளர் அமையம் - ILO
- சர்வதேச நிதி நிறுவனம் - IMF
- சர்வதேச தந்தி ஒன்றியம் - IDU
- சர்வதேச மறுசீரமைப்பு அபிவிருத்தி வங்கி – IORD
- சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் IAEI
- சர்வதேச அபிவிருத்திச் சங்கம் IDA
- சர்வதேச சிவில் விமானப்போக்குவரத்து அமையம்-ICAO
- சர்வதேச குழந்தைகள் நிதியம் - UNISEF
- உலக வளிமண்டலவியல் ஆராய்ச்சி நிறுவனம் - WMO
- உலக புத்திஜீவிகள் அமையம் - WIPO
- உலக திருச்சபைகள் அமையம் - WCC
- உலக பல்கலைக்கழக ஸ்தாபனம் - UNU
- உலக தபால் சங்கம்- UPU
- ஐரோப்பிய பொதுச் சந்தை – ECM
- ஐரோப்பிய நாடுகளின் விண்வெளி ஆராய்ச்சி ஸ்தாபனம் - ESA
- உலக உணவு விவசாய நிறுவனம் - FRO
- ஐக்கிய நாட்டு கல்வி விஞ்ஞான கலாச்சார அமையம் - ESA
- பெற்றோல் ஏற்றுமதி நாடுகளின் அமையம் - OPEC
- ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் OAU
- ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி – ESRO
- ஐக்கிய நாடுகளின் அநாதைகள் ஸ்தாபனம் UNHCR
- அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனம் - CIA
- இந்திய ஆராய்ச்சி தொகுப்பு பிரிவு – RAW
- இலங்கை தேசிய புலனாய்வுக் குழு – NIB
- ஐக்கிய அமெரிக்காவின் உலக ரகசிய பொலீஸ் - FBI
- பாலஸ்தீன் விடுதலை இயக்கம் PLO
- உலக வர்த்தகநிலையம் - WTO
- சர்வதேச செஞ்சிலுவை சங்கம் - ICRC

## செய்தி நிறுவனங்கள்

- இலங்கை - லங்காபுவத்
- இந்தியா - P. T. I, U. N. I
- ஈராக் - I. N. A
- ஈரான் - இர்னா
- பிலிப்பைன்ஸ் - P. N. A
- ஜப்பான் - கயோடே

- பிரான்ஸ் - A. F. B
- இத்தாலி - அன்சா
- ரஸ்யா - டாஸ்
- சீனா - சிங்குவா
- அமெரிக்கா - ராய்ட்டர்
- கியூபா - பெரிலா
- பிரேசில் - A. N
- ஆஜென்றினா - டீலம்
- கானா - G. N. A
- சைரே - A. Z. B
- மொறோக்கோ - M. A. B
- எகிப்து - மேனா
- யூகோஸ்லாவியா - டான்ஜிக்
- ஜேர்மனி - D. B. A
- மலேசியா - டொர்நமா

**பாராளுமன்றங்கள்**

- இந்தியா - லோக்சபா
- இஸ்ரேல் - கினேசற்
- அயர்லாந்து - டயஸ்
- இலங்கை - பாராளுமன்றம்
- ஆப்கானிஸ்தான் - சோறோ
- ஈரான் - மஜ்லிஸ்
- அமெரிக்கா - காங்கிரஸ்
- டென்மார்க் - பொபிக்றில்
- ஹங்கேரி - தேசியசபை
- ரஸ்யா - சுப்பிறீம் சோவியற்
- பிரித்தானியா - பாராளுமன்றம்
- சீனா - தேசிய மக்கள் காங்கிரஸ்
- யப்பான் - டயட்

**நாடுகளின் பழைய பெயர்களும் தற்போதைய பெயர்களும்**

- பர்மா - மியான்மார்
- ரொடிசியா - சிம்பாபே
- பாரசீகம் - ஈரான்
- சயர் - கொங்கோ
- மொசபத்தேமியா - ஈராக்
- ஒல்லாந்து - நெதர்லாந்து
- அபிசீனியா - எதியோப்பியா

சுவர்ணா

(சாவகச்சேரி)

# கல்லூரி மாணவர்கள் காதலிக்கலாமா?

காதல் என்பது பொதுவானது. இந்த பொதுவான தூய்மையான காதல் என்ற சொல்லை ஏன் கல்லூரி மாணவர்கள் பயன்படுத்தக்கூடாது? ஏன் மாணவர்களிற்கு காதலிக்கின்ற உரிமை இல்லையா? மாணவர்களால் புனிதமாகக் காதலிக்க முடியாதா? இவ்வாறான கேள்விகள் சில மாணவர்களின் மனதில் எழுவது இயல்பானது தான். இதனைப் பிழை என்று கூறமுடியாது. ஏன் என்றால் இளமைப் பருவத்தில் இவ்வாறான கேள்விகள் எழுவது இயல்பானது தான்.

இருந்தபோதும் மாணவர்கள் காதலிப்பதை பிழை என்று நான் குறிப்பிடமாட்டேன். ஆனால் மாணவர்கள் தங்களுடைய இலக்கை அடைந்த பின்னர் காதலிப்பது தான் பொருத்தமானது. ஒவ்வொரு மாணவனும் ஒரு இலட்சியப் பற்றுடனேயே கல்வியைத் தொடர்கின்றான். இந்த இலட்சியத்தை அடைந்த பின்னர் காதலிப்பதே பொருத்தமானது. கல்வி கற்கின்ற காலப்பகுதியில் மாணவர்கள் கல்வியை காதலிப்பது தான் பொருத்தமானது. படிக்கின்ற காலப் பகுதியில் கல்வியைக் காதலிக்காமல் மாணவன் மாணவியையும், மாணவி மாணவனையும் காதலிப்பார்களேயானால் ஆரம்பத்தில் இந்தக் காதல் மிக இனிமையாகத்தான் இருக்கும். ஆனால் வாழ்வோட்டத்தில் இந்தக் காதலில் சுவை இருக்காது எனவும், விரக்தியின் விளிம்பில் நிற்க வேண்டி ஏற்படும் எனவும் அனுபவத்தில் கண்டவர்கள் கூறுகின்றார்கள்.

குறிப்பாகக் கட்டிளமைப் பருவ வயதில் கூடுதலாக பாடசாலைகளில் மாணவ மாணவியரிடையே காதல் மலர்வது சாதாரணமாகி வருகின்றது. இதில் சில காதலைத் தவிர பல காதல் தோல்வியைத் தான் தழுவுகின்றது. குறிப்பாக உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் ஒருவனோ அல்லது ஒருத்தியோ காதலில் இறங்கும்போது எதிர் கால வாழ்க்கையைப் பற்றி சிந்திப்பது குறைவு. கூடுதலாக அந்தரங்கமான பகுதிகள் மீது ஆசை கொண்டே இந்தக் காதல் மலர்கின்றது. இதனால் இந்தக் காதலில் குறிப்பாக ஆண்கள் குறிப்பிட்ட இலக்கை அடைந்தவுடன் இந்த வகையான காதலை முறித்துக் கொள்வதும் உண்டு. இது தற்காலத்தில் ஒரு புதிய கலாச்சாரமாக வளர்ந்து



வருகின்றது. இந்த விடயத்தில் 80% ஆண்களில் பிழை இருக்கின்றபோதும், இளவயதுப் பெண்களும் நாகரீகம் என்ற போர்வையில் ஆண்களிற்கு இச்சையைத் தூண்டக் கூடிய வகையில் உடை அணிந்து செல்வதும் ஒரு பிரதான காரணம் தான். சில பெண்கள் தற்போது அணிகின்ற உடை உற்றுப்பார்த்தால் உடை போட்டரில் பிரயோசனமிருப்பதில்லை.

எனவே ஒரு பெண் நினைத்தால் ஒரு ஆணை நல்லவனாக மாற்றவும் முடியும். கெட்டவனாக மாற்றவும் முடியும்.

அடுத்து பல்கலைக்கழக மாணவர்களை எடுத்துக் கொண்டால் குறிப்பாக தென்பகுதிப் பல்கலைக்கழகங்களில் ஒரு நாளண்டு ஒருவரை காதலிக்கின்ற கலாச்சாரமே அங்கு உள்ளது. இங்கு ஆண்களும் சரி பெண்களும் சரி இவ்விடயத்தை சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்கிறார்கள். இவர்களின் காதல் காமம் வரை தான் கூடுதலாகச் செல்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை எடுத்துக் கொண்டால் இங்கு தமிழரின் கலை கலாச்சார பாரம்பரிய விழுமியங்களைத் தழுவிய வகையிலேயே இங்கு மாணவர்கள் காதல் விவகாரத்தில் ஈடுபடுகின்றார்கள். ஆடை அணிகின்ற விதத்தில் தமிழரின் பண்பாட்டை பேணத்தவறுகின்ற போதும் கட்டுக்கோப்பான காதலே இங்கு உள்ளது. குறிப்பாக காதல் ஜோடிகள் என்று பார்த்தால் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்குத்தான் இங்கு உள்ளது. கூடுதலாக பல்கலைக்கழக பட்டம் பெற்ற பின்னரே காதல், திருமணம் என்பன பற்றி இங்குள்ள மாணவர்கள் சிந்திக்கின்றார்கள்.

இந்த வகையில் பல்கலைக்கழக மாணவர்கள் காதலிப்பதை பிழை என்று கூற முடியாது. ஏன் என்றால் அவர்கள் நல்லது கெட்டதை அறிந்து முடிவு எடுக்கக் கூடிய நிலையில் இருப்பவர்கள். ஆனால் பாடசாலை மாணவர்கள் தீர்க்கமாக முடிவு எடுக்க முடியாத வயதில் இருப்பவர்கள். எனவே பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்கள் காதல் விவகாரத்தை எண்ணியே பார்க்கக் கூடாது.

பல்கலைக்கழக மாணவர்கள் நல்லது கெட்டதை விளங்கும் நிலைக்கு வந்துள்ளதால் அவர்களே முடிவு எடுப்பது பொருத்தமாகும். ஆனால் படித்துப் பட்டம் பெற்று வேலை தேடிய பின்னர் காதலித்து திருமணம் முடிப்பதே நலம் தரும். இதைவிட வீட்டாரால் ஏற்பாடு செய்யப்படுகின்ற திருமணத்தை எண்ணி மனம் உடையக் கூடாது. ஏன் என்றால் திருமணத்தின் பின்னும் மனைவி கணவனையும், கணவன் மனைவியையும் காதலிக்க முடியும்.

த.யாழவன்

*வாசகர்களே!*
**கல்லூரி மாணவர்கள் காதலிக்கலாமா?**
**என்ற பகுதிக்கு உங்கள் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் எழுதி அனுப்பலாம்**

**அன்பிற்கினிய மாணவ மணிகளே!**

உங்களிற்காக பெறுமதிமிக்க பரிசுகள்
காத்திருக்கின்றது.

வான்முழக்கம் காட்டுரைப்போட்டி ஒன்றை உங்களிடையே நடாத்த உள்ளது. 5பக்கங்களிற்கு குறையாமல் சமகால அரசியலை மையமாக வைத்து கட்டுரை எழுதப்படவேண்டும்.

**கட்டுரைத்தலைப்பு**

**"மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்"**

கட்டுரைகள் யாவும் 25/02/2002 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

வான்முழக்கதின் ஊடாக உறவுப்பாலம் அமைக்க விரும்புவேர் உங்களுடையசிறியபுகைப்படத்துடன் பெயர், முகவரி, தொழில் போன்ற விபரங்களை எழுதி அனுப்பினால் உறவுப்பாலம் அமைக்க முடியும். உறவுப்பாலம் அமைப்போர் வான் முழககத்தின் அங்கத்தவராகவும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்....

**"வான்முழக்கம்"**

**பிரதம ஆசிரியர்,**

**வே.தவச்செல்வம்,**

**யாழ் தொலைத் தொடர்பு நிலையம்,**

**284, பலாலி வீதி, கந்தர்மடம்,**

**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி இலக்கம்: 3533**

# T.RASIAH & SON

## த.இராசையா அன் சன்

இல்லங்கள் எழில் கொஞ்ச.......
எண்ணில்லா வண்ணங்கள்..........!

DEALERS IN DUCO, DULUX, PENTALITE
& LANKA PRIDE PAINTS

23/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

23/10, Stanley Road,
Jaffna.

# நியூ நகுலா ஜீவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாண

# நியூ லலிதாஸ் ஜீவல்லறி

171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



# நகுலா நகை மாடம்

241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாண

காலத்தால் அழியாத கற்பனைக்கும் எட்டாத
எழில்மிகு படைப்பாளர்கள்

வாடிக்கையாளர்கள் - நண்பர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

யாழ் நகரில்
ஐஸ்கிறீம் உலகில் ராஜாவாக விளங்குகிறது

# "ராஜா கிறீம் ஹவுஸ்"

தன்னிகரில்லா சிறப்போடு மக்களைக் கவர்ந்திடும்
ஐஸ்கிறீம் வகைகள்
யாவற்றையும் ஒரே இடத்தில் சுவைத்து
மகிழ்ந்திட நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்

## ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## RAJAH CREAM HOUSE

36, Kasthuriyar Road,
Jaffna.

நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து
பெற்றுக் கொள்ளநாட வேண்டிய ஸ்தாபனம்

# நியூ விதுஷா நகை மாடம்

தங்கப் பவுண் நகை வியாபாரம்

191, H.K. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் T.P. 021 - 2903

கிளை நிறுவனம் :-

# நியூ விதுஷன் நகை மாடம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22 கரட்டில்
செய்து கொடுக்கப்படும்

# ஹுலம் கிறீம் ஹவுஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் போன் : 021-214

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
ஸ்பெஷல் ஐஸ்கிறீம், சொக்லட் ஐஸ்கிறீம்

# HULAM

*Cream House*

226, Kasthuriyar Road, Jaffna. T.P. :021-214

# "மெக்ஸ்"
# புடவை மாளிகை

மொத்த, சில்லறை விற்பனையாளர்



## தைப்பொங்கல் புது வருட வாழ்த்துக்கள்

குறைந்த விலை ! சிறந்த பொருள் !!

இல.70, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

இல.34, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.ம்

## "ஷெல்" சமையல் வாயு
## (SHEL GAS)

வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்

இல.70, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
T.P. : 021 – 2032
021 – 2852

# Konica Colour Lab




நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப
புகைப்படங்கள் எடுத்திடவும்,
புகைப்படச்சுருளை நவீன முறையில்
பிரதியாக்கம் செய்திடவும்,

## யாழ்நகரில் தனித்துவமான நிறுவனம்
## கொனிக்கா கலர் லாப்

14, Sri Vengadesan Veethy,
Jaffna,
Tel: 021-3493